100 நாள் வேலை புதிய சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல்

# கிராமப்புற மக்களின் முதுகெலும்பை முறிக்கிறது மோடி அரசு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி கடும் கண்டனம்!

சென்னை, மார்ச் 13-

"100 நாள் வேலை புதிய சட்டத்தை நிறைவேற்ற எந்த நடவடிக்கையையும் மோடி அரசு எடுக்கவில்லை! கிராமப்புறத்தின் முது கெலும்பை முறிக்கும் மோடி அரசின் வஞ்சகத்திற்கு, துணை போகும் பழனிசாமியின் பச்சைத் துரோகத்திற்குத் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள்'' என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான பிரதமர் மன்மோகன் ஆட்சியில், 2006ல் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில், 100 நாள் வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கோடிக்கணக்கான கிராம மக்கள் பயன் அடைந்து வந்தார்கள். கிராமப் புறத்தில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் 18 வயது நிரம்பிய ஒருவருக்கு ஒரு நிதியாண்டில் குறைந்த பட்சம் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது சட்டப்படி உரிமையாக்கப்பட்டது.

**குறைத்து நிதி ஒதுக்கப்பட்டது!**

வறுமை ஒழிப்புத் திட்டமான 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை மோடி ஆட்சிக்கு வந்தும் படிப்படியாக அழிக்க ஆரம்பித்தார். திட்டத்துக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டினார்கள்.2021-2022 ல் 98,468 கோடி ரூபாய் ஒதுக்கிய நிலையில் 2022-2023ல் 73,000 கோடி ரூபாயும் 2023-2024ல் 60 ஆயிரம் கோடி ரூபாயும் என ஆண்டு தோறும் குறைத்து நிதியை ஒதுக்கி வந்தார்கள். இந்தப் பற்றாக்குறையால் ஆண்டுக்குச் சராசரியாக வெறும் 40 நாட்கள் வேலை மட்டுமே என்ற நிலை உருவானது. இதனால், கிராமப்புறத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

100 நாட்களுக்கு அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்றால் ரூபாய் 2.72 லட்சம் கோடி தேவை. ஆனால், அதற்குரிய நிதியை ஒதுக்காமல் மோடி அரசு வஞ்சித்தது. 2023 2024ல் ஒதுக்கப்பட்ட தொகையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.198 சதவீதம்தான். இந்தத் திட்டத்தில் 100 நாட்கள் கிடைத்த வேலை, மோடி ஆட்சியில் 30 நாட்கள் கூட கிடைப்பதில்லை. 2021ம் ஆண்டு முதல் 7.6 கோடி தொழிலாளர்களின் நூறு நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டப் பணி அட்டைகள் நீக்கப்பட்டன.

இப்படி மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு வாய் ஜாலங்களுடன் 'விபி கிராம் ஜி' எனும் புதிய சட்டத்தை எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே கொண்டு வந்தது.

**நாடாளுமன்றத்தில் தி.மு.க. கடும் எதிர்ப்பு!**

கிராமப்புற ஏழை மக்களுக்கு நூறு நாள் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதும், தேசப்பிதா காந்தியாரின் பெயரை நீக்குவதும்தான் பா.ஜ.க. அரசின் ஒரே நோக்கம் என்பதை முதலமைச்சர் அவர்கள் பல முறை சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதற்குக் கடுமையான எதிர்ப்பை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்தார்கள்.

இந்தப் புதிய சட்டத்தால் 125 நாட்கள் வேலை கிடைக்கும், மக்கள் கூடுதலாகப் பயன் பெறுவார்கள் என்றெல்லாம் சமாளிப்பு பதில்களைக் கூறிக் கொண்டிருந்த ஒன்றிய பாஜக அரசு, இதுவரை இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான எந்த ஆக்கப்பூர்வ நடவடிக்கையையும் எடுக்க வில்லை. சட்டத்தை எவ்வாறு செயல்படுத்தப் போகிறோம்? என்ற எந்தவொரு செயல்திட்டத்தையும் அறிவிக்காமல் கிடப்பில் போட்டு வைத்துள்ளது.



ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்த இருக்கிற இந்தச் சட்டத்திற்கான அடிப்படை விதிகளையே இன்னும் வகுக்காமல் ஒன்றிய அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகின்றது. மாநிலங்களுக்கு எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும் என்பதற்கான எந்தத் தெளிவான வழிகாட்டலும் இன்னமும் வகுக்கவில்லை. கிராம ஊராட்சிகளை எந்த அளவு கோல்களின் அடிப்படையில் தரம் பிரிப்பது என்பதும் இறுதி செய்ய வில்லை.

**வேலை வாய்ப்பு உரிமையை பா.ஜ.க. பறிக்க முயல்கிறது!**

புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், அதை நிறை வேற்று வதற்கான எந்த நடவடிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்காததைப் பார்க்கும் போது கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பு உரிமையை பா.ஜ.க. அரசு முற்றிலும் பறிக்க முயல்வது அப்பட்டமாகத் தெளிவாகிறது. விபிகிராம் ஜி சட்டத்திற்கு இதுவரை ஒன்றிய அரசு செய்தது விபிகிராம் ஜி திட்டத்திற்கு 50 ஆயிரம் ரூபாயில் லோகோ உருவாக்கியது மட்டுமே.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் சட்டத்தால் கிடைத்த பலன்கள் கூட விபிகிராம் ஜி சட்டத்தால் கிடைக்காத போதும், புதிய சட்டத்தைக்கூட அமல்படுத்த மோடி அரசு தயங்குகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது 100 நாள் வேலைத் திட்டத்தையே முற்றிலும் ஒழித்துக் கட்டும் முடிவில் மோடி அரசு இருப்பதையே இன்றைய செயல்பாடுகள் காட்டுகின்றன.

**12 கோடி கிராமப்புற தொழிலாளர்கள் பாதிப்பு!**

வாயில் நுழையாத வட மொழி பெயர் கொண்ட விபிகிராம் ஜி திட்டத்தில் மாநிலங்களின் மீது கூடுதல் நிதிச் சுமையை ஏற்றியிருக்கிறார்கள். 'வேலை என்பது அடிப்படை உரிமை' என்ற நிலையிலிருந்து 'தேவை அடிப்படையில் வேலை' என மாற்றம் செய்யப்பட்டது. 100 சதவிகித ஒன்றிய அரசின் நிதிப் பங்கீடு என்பதை 60:40 என மாற்றி மாநிலங்கள் மீது கூடுதல் நிதிச் சுமை சுமத்தப்பட்டுள்ளது. கிராமங்களை மீண்டும் வறுமையின் பிடியில் தள்ளும் புதிய திட்டத்தால் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் ஒரு கோடி கிராமப்புற மக்களுக்கு வேலை கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் 12 கோடி கிராமப்புற தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள். நூறு நாள் வேலைத் திட்ட த்திற்குரிய ஊதியத்திற்கான நிதியை ஒன்றிய அரசு வழங்காத போதெல்லாம் அந்த உரிமைக்காகச் சட்டப்பூர்வமாகவும் மக்கள் மன்றத்திலும் தி.மு.க. போராடியது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாடு தழுவிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது

**பழனிசாமியின் பச்சைத் துரோகம்!**

ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமியோ இந்த அநீதிக்கு வக்காலத்து வாங்கி தமிழ்நாட்டுக்குத் துரோகத்தைச் செய்தார். கிராமப்புற மக்களின் வயிற்றில் அடிக்கும் புதிய சட்டத்தை ஆதரித்து தனது துரோகப் பணியைச் செவ்வனே செய்து முடித்த பழனிசாமி, தான் ஆட்சிக்கு வரப்போவதில்லை என்பதும் தெரிந்தும் 150 நாட்களாக வேலையை உயர்த்துவேன் என நாடகமாடிக் கொண்டிருக்கிறார். புதிய சட்டத்தை ஒன்றிய அரசு உடனே அமல்படுத்த வேண்டும் என்று கூடச் சொல்ல பழனிசாமிக்கு துணிவில்லை. நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வரும் வஞ்சகத்திற்கும் பழனிசாமியின் பச்சைத் துரோகத்திற்கும் மிக விரைவில் தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

மாமன்ற உறுப்பினர் சம்பத் தலைமை – ஏற்பாட்டில்

# கோவை இடையர் பாளையம் பகுதியில் பூங்கா திறப்பு!

## மாலதி – தெய்வானை – கண்ணகி – துரைப்பாண்டியன் பங்கேற்பு!

கோவை, மார்ச் 13 -

கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ. அ. ரவி அறிவுறுத்தலின் பேரில், இடையர்பாளையம் பகுதியைச் சார்ந்த தேவாங்க நகர் காவேரி வீதியில், 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் என். சம்பத் தலைமையில் ஏற்பாட்டில் , கோவை மாநகராட்சி கல்வி, விளையாட்டு , பூங்கா குழு தலைவரும், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும், 34 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி ரிப்பன் வெட்டி பூங்காவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மாநகராட்சி மண்டல குழு தலைவரும் 36 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினருமான திருமதி தெய்வானை தமிழ்மறை , 35வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைபாண்டியன், இடையர்பாளையம் பகுதிக் கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முருகா னந்தம், 16 ஆவது வட்டக் கழக அவைத் தலைவர் சுப்பிரமணியன், BLA2, BLC, BDA கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் முன்னிலை வகிக்க பூங்கா திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 25 வருடங்களாக மாநகராட்சியால் பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில், தற்போது 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத், பூங்காவிற்கு அருகில் வசிக்கும் இடையர்பாளையம் பகுதி கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முருகானந்தம் மற்றும் கவுண்டபாளையம் மாநகராட்சி இன்ஜினியர் ராஜேஷ் ஆகியோரின் நீண்ட கால இடைவிடா முயற்சியின் பலனாக இந்த பூங்கா வரப் பெற்றுள்ளது என்பது இந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். மாலை பொழுதினை தங்கள் குடும்பத்தாருடன் வந்து அமர்ந்து பூக்களுடன் உடன்கூடிய நறுமணத்தை அனுபவிக்க மகிழ்ச்சியுடன் இன்புற்று கழிக்க இந்தப் பூங்காவானது வீடுகள் அடர்ந்த இந்தப் பகுதியின் மத்தியில் சாலச்சிறந்ததாக அமையப்பட்டுள்ளது என்று இப் பகுதி மக்கள் 'திராவிட மாடல்' ஆட்சிக்கு பாராட்டு தெரிவித்தனர்.



கோவை மாவட்டம், நரசிபுரம், தர்மராஜா கோயில் வளாகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 190 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் க.ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.நாராயணன், வருவாய் கோட்டாட்சியர் (தெற்கு) மாருதிப்ரியா, மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிசெல்வன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ. அ. ரவி அறிவுறுத்தலின் பேரில், இடையர்பாளையம் பகுதியைச் சார்ந்த தேவாங்க நகர் காவேரி வீதியில், 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் என். சம்பத் தலைமையில் ஏற்பாட்டில் , கோவை மாநகராட்சி கல்வி, விளையாட்டு , பூங்கா குழு தலைவரும், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும், 34 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி ரிப்பன் வெட்டி பூங்காவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மாநகராட்சி மண்டல குழு தலைவரும் 36 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினருமான திருமதி தெய்வானை தமிழ்மறை , 35வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைபாண்டியன், இடையர்பாளையம் பகுதிக் கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முருகானந்தம், 16 ஆவது வட்டக் கழக அவைத் தலைவர் சுப்பிரமணியன், BLA2, BLC, BDA கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் முன்னிலை வகிக்க பூங்கா திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

---

பெட்ரோல் – டீசல் செயற்கையான தட்டுப்பாட்டை தடுக்க

# ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், மார்ச் 13 -

கடந்த இரண்டு தினங்களாக செயற்கையான பெட்ரோல், டீசல் தட்டுப்பாட்டை உருவாக்கிவரும் நிலையில் அத்தியாவசிய வாகனங்களுக்கு பெட்ரோல், டீசல் கிடைக்காமல் பொதுமக்கள் தவிப்பதை தடுக்க ஒன்றிய அரசு முழுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



நேற்று மாலை முதல் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் பல இடங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என்ற வதந்திகள் சமூக வலைதளங்களில் பரவி, மக்கள் தேவையற்ற அச்சத்தில் அதிக அளவில் எரிபொருளை வாங்கி சேமித்து வைப்பது காணப்படுகிறது. உண்மையில் தட்டுப்பாடு இல்லாத நேரங்களிலும் இத்தகைய செயல்கள் "போலியான பெட்ரோல் தட்டுப்பாடு" உருவாக காரணமாகிறது. இதனால் பெட்ரோல் பங்குகளில் கூட்டம் அதிகரித்து, உண்மையில் தேவைப்படும் மக்களுக்கு எரிபொருள் கிடைக்காத நிலை ஏற்படுகிறது.

தற்போது அவசர ஊர்திகளான ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனம், பால் வாகனங்களுக்கும் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு அபாயகரமான நிலையில் உள்ளது.

இந்த நிலையைத் தவிர்க்க சில கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பது அவசியமாகிறது. முதலில், பெட்ரோல் பங்குகளில் கேன், டின் போன்ற பாத்திரங்களில் பெட்ரோல் வழங்குவதற்கு தடை விதிக்க வேண்டும். வாகனங்களில் நிரப்பும் அளவுக்கு மட்டுமே பெட்ரோல் வழங்க வேண்டும். இதனால் எரிபொருளை பதுக்கி வைத்து கருப்பு சந்தையில் விற்பனை செய்வதைத் தடுக்க முடியும்.

அதேபோல், விவசாய பயன்பாட்டிற்காக டீசல் தேவைப்படும் விவசாயிகளுக்கு தட்டுபாடின்றி டீசல் வழங்கலாம். மேலும் முன்கள பணியாளர்களான மருத்துவர்கள், செவிலியர்கள், காவலர், சுகாதார பணியாளர்கள், பத்திரிக்கையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர்க்கும் முன்னுரிமை அடிப்படையில் பெட்ரோல் வழங்க வேண்டும்.

மேலும், எரிபொருளை கேன், டின் போன்றவற்றில் அதிக அளவில் வாங்கி பதுக்கி வைப்பதை முழுமையாக தடுக்க வேண்டும். இது பாதுகாப்பற்ற ஆபத்தான சூழ்நிலை உருவாக்கும். தேவையற்ற பதுக்கல் காரணமாக பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய எரிபொருள் கிடைக்காது. பொதுமக்களின் அச்சத்தை பயன்படுத்தி செயற்கையாக எரிபொருள் பற்றாக்குறை உருவாக்கி கருப்பு சந்தை விற்பனையில் ஈடுபடுவது சட்டவிரோதமானதும் பொதுநலனுக்கு எதிரானதும் ஆகும்

அதேபோல் வணிக சமையல் எரிவாயு தட்டுபாடு ஏற்பாட்டு வனிகர்கள் மிகவும் பாதிப்பில் உள்ளனர் இதனால் அங்கு பணிப்புரியும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் சமையல் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்திட வேண்டும்.

இதில் ஒன்றிய அரசும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். நாட்டில் எரிபொருள் விநியோகம் சீராக நடைபெற தேவையான அளவு பெட்ரோல் மற்றும் டீசல் கையிருப்பை முன்கூட்டியே வைத்திருக்க வேண்டும். எண்ணெய் நிறுவனங்களின் மூலம் அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சமின்றி சீரான விநியோகம் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் வதந்திகளைத் தடுக்கும் வகையில் சரியான தகவல்களை மக்கள் மத்தியில் வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். எரிபொருள் பதுக்கல் மற்றும் கருப்பு சந்தை விற்பனை மீது கடுமையான கண்காணிப்பு மேற்கொண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் தேவையான அளவுக்கு மட்டுமே பெட்ரோல் மற்றும் டீசலை வாங்க வேண்டும்.

இவ்வாறு மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

## தி.மு.க. மாணவர் அணி

### நிரப்பப்பட வேண்டிய மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!**

திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **பா. சதீஷ்குமார்** (5, கணேசன் தெரு, ஒண்டிகுப்பம், மணவாள நகர், திருவள்ளூர்) அவர்களும்;

விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **டி.எம். பிரித்திவ்** (313/5, நேரு வீதி, பூந்தோட்டம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்) அவர்களும்;

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக **ரா. அரங்கநாதன்** (131, நடுத் தெரு, வீரமூர் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.) அவர்களும்;

இராமநாதபுரம் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக **ஆர்.கே.கே. கார்த்திக்**, (59/4, குட்ஸ்சட் தெரு, அண்ணா நகர், இராமநாதபுரம் மாவட்டம்), **என்.டி.முகேஷ்குமார்** (12ஏ/1, மார்கெட் தெரு, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோரும் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-03-2026.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வனத்துறை சார்பில் நீலகிரி வரையாடு திட்டத்தின் கீழ் ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையத்திற்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து, கோவை மாவட்டம், காந்திபுரத்தில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் ஆகியோர் பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து, நீலகிரி வரையாடு சிலையினை திறந்து வைத்தனர். இதில் தலைமை வனப்பாதுகாவலர், ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குநர் வெங்கடேஷ், கோவை மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் பிரபு, நீலகிரி வரையாடு உதவி திட்ட இயக்குநர் கணேஷ்ராம், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசந்திரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், மாமன்ற உறுப்பினர் வித்யா ரங்கநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.